**D E P O S I T I O N  OF W I T N E S S**

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

CC.No.78/2022 Old No.760/2019

P.W.1

| | |
|---|---|
| Name | : Vijayalakshmi |
| Father/Husband Name | : Gurumoorthi |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 12.03.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு பல்லாவரம் கிளை யூனியன் வங்கி மற்றும் பல்லாவரம் HDFC வங்கியில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. வழக்கின் எதிரி மூலம் பல்லாவரம் காவல் நிலையத்தில் புகார் அளித்த ஜீவா என்பவரை எனக்கு தெரியும். 2016ல் இருந்து எதிரி மூலமாக ஜீவா என்பவரை எனக்கு தெரியும். மளிகை கடையை எனது மாமனார் நடத்தி வருகிறார். 2016ல் இருந்து நான ' எதிரிக்கு தொகையினை கொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் ஆம் உள்ளது. நான் கடந்த 18.9.2024ல் குறுக்கு விசாரணையில் ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் அவற்றை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் உள்ளது.

நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் பட்சத்தில் எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் ஆம். நான் எனது முதல்

விசாரணையிலும் புகாரிலும் பல்லாவரம் காவல் நிலையத்தில் எதிரியை விசாரித்தபோது காசோலை மற்றும் செக்யூரிட்டி ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை.

எதிரியின் கணவர் பெயர் பாக்யராஜ் என்றால் ஆம். நான் எதிரிக்கு அனுப்பியதாக சொல்லப்படும் சட்ட அறிவிப்பில் ரூ.23,87,000./ த்தினை நான் கோகுலம் சிட்பைனான்ஸ்ல் இருந்து வாங்கி எதிரிக்கு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.11,00,000 கோகுலம் சிட் பைனான்ஸ்ல் கடன் வாங்கினேன். மீதி நகைகளை அடமானம் வைத்தேன். நான் ரூ.11,00,000 கோகுலம் சிட் பைனான்ஸ்ல் கடன் வாங்கியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கடன் வாங்கிதான் எனது பிரச்சனைகளை தீர்க்க வேண்டிய நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு காசோலை தொகையினை கடன் கொடுப்பதற்கு எனக்கு போதிய வசதி இல்லை என்றால் சரியல்ல.

6.8.2018ல் ரூ.1,00,000 மட்டும் தான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ரூ.1,00,000 கடன் கொடுக்கும்போது ரூ.10,000 வட்டி பணம் பிடித்துக்கொணடேன் தன் என்றால் சரியல்ல, நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. மேற்படி கடன் வாங்கிய ரூ.1,00,000 தொகையினை 19.10.2018 தேதியன்று இவ்வழக்கின் எதிரி திருப்பி செலுத்தி விட்டார் என்றால் எதிரி எனக்கு எந்த கடன் தொகையும் திருப்பி கொடுக்கவில்லை. பார்த்துதான் சொல்ல இயலும். மேற்படி கொடுத்த கடனுக்காகத்தான் வழக்கு காசோலை செக்யூரிட்டியாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.1,00,000 த்திற்கு இல்லை. ரூ.23,87,000த்திற்கான செக்யூரிட்டியாகும்.

செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்பதால்தான் காசோலை பூர்த்தி செய்யப்படாமல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கொடுத்த கடன் தொகையை திருப்பி செலுத்திய பின்பு வழக்கு காசோலையை நான் அவரிடம் நான் திருப்பி தராமல் காலம் தாழ்த்தி வந்தேன் என்றால் பொய்யானவை ஆகும். எதிரியை பழிவாங்கும் நோக்கில் தான் ஜீவா என்பவருடன் சேர்ந்து வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஜீவா என்பவர் கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ள எதிரியுடன் இவ்வழக்கின் எதிரி உடன் இருந்ததால்தான் இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. எதிரியினை பழிவாங்கும் நோக்கில்

வழக்கு காசோலையை நான் நிரப்பி நான் பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தான் காசோலைக்கு கொடுத்த தேதியினை புகார் மற்றும் முதல் விசாரணையில் முரணாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு என்பதால்தான் காசோலையில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் வெவ்வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு உண்மையில் நான்பணம் கொடுத்திருந்தால் வருமான வரி தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஜீவா என்பவர் கொடுத்த புகாரில் இவ்வழக்கின் எதிரியினை சிக்க வைத்து விட்டு அவருக்கு காசோலை திரும்ப கொடுக்கப்படாமல் தடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. பொய்யான வழக்கு என்பதால்தான் எதிரி வசிக்காத வீட்டுக்கு நான் நோட்டீஸ் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகாரில் பரிகார பத்தியில் வழக்கறிஞர் கட்டணம் என்று போடப்பட்டுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி சட்டப்பூர்வமாக அளிக்க வேண்டிய கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கான வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.